30th
JUNE
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 37 | பக்கங்கள் - 11 | editor.uthayam@gmail.com



## ஜனாதிபதி தேர்தலுக்காக பரந்த

# கூட்டணிக்கு ரணில் வியூகம்



### தமிழ் முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சு

### மொட்டுவுடன் பேசவும் திட்டம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பரந்து பட்ட கூட்டணியொன்றினை அமைப்பதற்கான பாரிய முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார்.அடுத்த வாரம் முதல் கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகளில் அவர் தீவிரமாக இறங்கவுள்ளதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அடுத்த வாரம் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிகாக ஜனாதிபதி

02ம் பக்கம்பார்க்க...

## தீர்ப்புக்கு எதிராக நாளை மேன்முறையீடு செய்யும் ஹிருணிகா!

மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள்

02ம் பக்கம்பார்க்க...

## பெரும்பான்மை கிடைக்காமையால்

### ஈரானில் மீண்டும் தேர்தல்





ஈரானில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எந்த வேட்பாளரும்

02ம் பக்கம்பார்க்க...

## தென்னாபிரிக்காவை துரத்தும் துரதிஷ்டம்

### கிண்ணம் வென்றது இந்தியா



(அரபாத் பஹுர்தீன்)

9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரின் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் விராட் கோஹ்லியின் பொறுப்பான துடுப்பாட்டமும் பாண்டியா மற்றும் பும்ராவின் மிரட்டலான பந்துவீச்சும் கைகொடுக்க ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி 7 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்று 9ஆது ரி20 உலகக்கிண்ணத் தொடரின் சம்பியன் மகுடத்தை தனதாக்கியது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய

03ம் பக்கம்பார்க்க...

## விமரிசையாக நடந்தேறிய வை.எம்.எம்.ஏ வருடாந்த மாநாடு



(ஏ.எஸ்.எம்.ஜாவித், இக்பால் அலி)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் 74வது வருடாந்த மாநாடு நேற்று (29) இலங்கை மன்றக் கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வை.எம்.எம்.ஏ.பேரவை தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுட்பூ துர்கத்(ளுநஅா டுரவகர

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## ஜனாதிபதி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான நகர்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்தோடு தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காகவும் அவர் திட்டமிட்டுள்ளார்.அடுத்து வரும் வாரங்களில் தமிழ் முஸ்லிம் கட்சித் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடாத்துவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து பரந்தப்பட்ட கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதுதொடர்பில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுக்கும் , ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் பல்வேறு சந்திப்புகள் கடந்த காலத்தில் இடம்பெற்ற போதிலும், எவ்வித இணக்கப்பாடுகளும் எட்டப்படாமலேயே அந்த சந்திப்புகள் முடிவுற்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என பசில் ராஜபக்ச, இந்த சந்திப்புகளில் கோரிக்கையாக முன்வைத்த போதிலும், அதற்கு ரணில் விக்ரமசிங்க இணங்கவில்லை.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கயுள்ளதாலும் இரண்டுக் கட்சிகளும் ஆளுங்கட்சியாக இருப்பதாலும் கட்டாயம் கூட்டணியொன்றை அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அடுத்தவாரம் ஜனாதிபதியுடன் நடைபெற உள்ள இந்த சந்திப்பில் மஹிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கலந்துகொள்ள உள்ளதாகவும் தெரியவருகிறது.

என்றாலும், பொதுஜன பெரமுனவில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு குழுவும், நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவாக ஒரு குழுவும் உருவாகியுள்ளது. இவர்களை சமரசப்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் முக்கிய அவதானம் செலுத்தப்படும் என அறிய முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவருவதால் கொழும்பில் அரசியல் கூட்டணி பேச்சுகளும் பேரம் பேசுதலுதம் சூடுபிடித்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில பங்காளிக் கட்சிகளை தமது பக்கம் இழுக்கும் நகர்வுகளிலும் ரணில் ஈடுபட்டுள்ளார்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் ஆளுங்கட்சியில் இணைக்கும் முயற்சிகளையும் ரணில் மேற்கொண்டுவருகிறார். எதிர்வரும் வாரங்களில் பல அதிரடி அரசியல் நிகழ்வுகள் கொழும்பு அரசியலில் இடம்பெறும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




## தீர்ப்புக்கு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக நாளை திங்கட்கிழமை மேன்முறையீடு செய்யவுள்ளதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர (Hirunika Premachandra) சிறைச்சாலை வைத்தியரிடம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மருத்துவ அறிக்கை பெறுவதற்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் வெலிக்கடை மகளிர் சிறைச்சாலையின் ஆர் அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹிருணிகா பிரேமச்சந்திரவும் ஏனைய கைதிகளுக்கு வழங்கப்படும் ஆடையுடன் அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

## விமரிசையாக...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வரசபரவ) பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல்.ரீ.பி.தெஹிதெனியவும்(டு.வு.ட னுநானைநடுலைய) கலந்து கொண்டார்.

வை.எம்.எம்.ஏ பேரவையைச் சேர்ந்த போஷகர் காலித் எம் பாரூக்(முாயடனை ஆ குயசழழம),சட்டத்தரணி அஸ்ரப் ரூமி(டயறலநச யுளாசயக சூழழஅை), தேசிய பொருளாளர் ரி.டி.எம். பிர்தௌஸ்(வு.னு.ஆ.குசைனயறள), பேரவை தேசிய பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி(யுளுஐகு ளூரமசை) ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூ ராமித், முன்னாள் கொழும்பு மேயர் அஸாத் சாலி உள்ளிட்ட பலர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

தலைமையுரையை பேரவை தேசிய தலைவர் ஐாளயயெ யு உயஅநநன நிகழ்த்தியதுடன் தேசிய பொது பொருளாளர் ரி.டி.எம்.பிர்தௌஸ் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதி நீதிபதி எல்.ரீ.பி.தெஹிதெனிய, பிரதம அதிதி இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுத்பூ துர்கத் ஆகியோர்கள் உரை நிகழ்த்தினர்.

நாடளாவிய ரீதியிலுள்ள வை.எம்.எம்.ஏ பேரவை உறுப்பினர்களுக்கு விசேட விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வை.எம்.எம்.ஏ பேரவையினால் சுபான் நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து சிறப்பித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் நீதிபதி எல். ரீ.பி.தெஹிதெனிய, பிரதம அதிதி இலங்கைக்கான துருக்கி தூதுவர் செமி லுட்பூ துர்கத் ஆகியோர்கள் பேரவையினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நன்றியுரையை பிரதி பொதுச் செயலாளர் பராஸ் பாரூக் நிகழ்த்தினார்.

## பெரும்பாண்மை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மை பலம் பெறாததால் மீண்டும் அடுத்த வாரம் இரண்டாம் கட்ட வாக்களிப்பை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அதி கூடிய வாக்குகளைப் பெற்றுள்ள இத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ள மசூத் பேஜஷ்கியான்(1.4 கோடி) இரண்டாம் இடத்திலுள்ள சயீத் ஜலீலி(90.4) ஆகியோருக்கிடையில் இரண்டாம் கட்ட தேர்தல் இடம்பெறவுள்ளது.



## தென்னாபிரிக்காவை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நாடுகளில் இடம்பெற்றுவரும் 9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரில் அனைத்து லீக் ஆட்டங்கள் முடிவில் முதல் அரையிறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 9 விக்கெட்டுக்களால் வீழ்த்திய தென்னாபிரிக்க அணி முதல் முறையாக ரி20 உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பின்னர் 2ஆவது அரையிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான இங்கிலாந்து அணியை 63 ஓட்டங்களால் வீழ்த்திய இந்திய அணி 10 வருடங்களின் பின்னர் ரி20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இந்நிலையில் இலங்கை நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு பார்படோஸ் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமான இறுதிப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ரோஹித் சர்மா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.இரு அணிகளும் அரையிறுதி ஆட்டங்களில் பங்கேற்ற அதே பதினொருவரை இப் போட்டியிலும் களமிறக்கியிருந்தது. இதற்கமைய இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ரோஹித் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் களம் நுழைந்தனர்.

அதற்கமைய தென்னாபிரிக்க சார்பில் முதல் ஓவரை மர்கோ ஜன்சென் வீச கோஹ்லி 3 நான்கு ஓட்டங்களை விளாச அவ் ஓவரில் 15 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி. மேலும் 2ஆவது ஓவரை கேசவ் மஹராஜ் பொறுப்பேற்று வீச முதல் இரு பந்துகளில் 4 ஓட்டங்களை விளாசிய ரோஹித் 3ஆவது பந்தில் கிளாசனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து வந்த ரிசப் பாண்ட் அவ் ஓவரின் 5ஆது பந்தில் டி கொக்கிடம் பிடி கொடுத்து டக் அவுட் ஆக இந்திய ரசிகர்கள் அமைதியாகினர்.

பின்னர் வந்த சூரியகுமார் யாதவ் 3 ஓட்டங்களுடன் ரபாடரின் வேகத்தில் ஆட்டமிழந்து ஏமாற்றம் கொடுக்க இந்திய அணி 34 ஓட்டங்களுக்கு முதல் 3 விக்கெட்டுக்களையும் இழந்து தடுமாறியது. பின்னர் 4ஆவது விக்கெட்டில் கோஹ்லியுடன் இணைந்த அக்ஷர் பட்டேல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த விராட் கோஹ்லி நிதானமாய் ஓட்டங்களைச் சேர்த்தார். தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களை விளாசித் தள்ளிய அக்ஷர் பட்டேல் 4 ஆறு ஓட்டங்கள் அடங்களாக 47 ஓட்டங்களைப் பெற்றிருக்க துரதிஷ்டவசமாக ரன்அவுட் ஆகி பெவிலியன் திரும்பினார். இந்த ஜோடி 4ஆது விக்கெட்டில் பெருமதியான 72 ஓட்டங்களை பெற்றிருந்தது.

5ஆவது விக்கெட்டிற்காக களத்திலிருந்த விராட் கோஹ்லியுடன் இணைந்த சிவம் டூபே வந்த வேகத்தில் ஆறு , நான்கு என விளாசி அணியின் ஓட்ட வேகத்தை அதிகப்படுத்த நிதானம் காட்டிய கோஹ்லி 48 பந்துகளில் அரைச்சதம் பதிவு செய்து நம்பிக்கை கொடுத்தார். அரைச்சதம் கடந்ததன் பின்னர் ரபாடரின் ஓவரில் ஒரு 6 மற்றும் ஒரு 4 ஓட்டங்களை விளாசி அதிரடிக்குத் திரும்பினார் கோஹ்லி. இரு துடுப்பாட் வீரர்களும் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களை சுவம்சம் செய்ய ஆட்டம் கண்டது பலமிக்க தென்னாபிரிக்க பந்துவீச்சு வரிசை.

பின்னர் 19ஆவது ஓவரை ஜன்சென் வீச அதன் 2ஆவது பந்தில் 4 ஓட்டத்தையும் 4ஆவது பந்தில் 6 ஓட்டத்தையும் பறக்கவிட்ட கோஹ்லி 5ஆவது பந்தில் பிடிகொடுத்து 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துகளம் நுழைந்த பாண்டியா முதல் பந்தில் 4 ஓட்டத்தை அடித்து மிரட்டினார். 20ஆதும் இறுதியுமான ஓவரில் சிவம் டூபே 4 ஓட்டம் ஒன்றை அடித்து 4ஆவது பந்தில் மில்லரிடம் பிடிகொடுத்து 27 ஓட்டங்களுடன் வெளியேற இறுதிப் பந்தில் ஜடேஜா ஆட்டமிழக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓர்களில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது இந்திய அணி. பந்துவீச்சில் மஹராஜ் மற்றம் நேர்ட்ஜே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் முதல் உலகக்கிண்ணத்தை வெற்றி கொள்ள 177 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துடன் பதிலுக்கு களம் நுழைந்த தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர்களான டி கொக் மற்றும் ரீசா ஹெக்டிக் ஜோடி எதிர்பார்த்த ஆரம்பத்தை கொடுக்கவில்லை. 2ஆவது ஓவரை வீசிய பும்ராவின் வேகத்தில் ரீசா ஹென்ரிக்ஸ் 4 ஓட்டத்துடன் போல்ட் ஆக , அர்ஸ்தீப் சிங்கின் அடுத்த ஓவரில் அணித்தலைவர் மார்க்ரம் 4 ஓட்டங்களுடன் பாண்டிடம் பிடிகொடுத்து வெளியேற தென்னாபிரிக்க அணி 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து பறிதவித்தது.

இந்நிலையில் 3ஆவது விக்கெட்டில் இணைந்த டி கொக் மற்றும் ஸ்டப்ஸ் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்கப் போராடி வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடி தமக்கிடையில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்திருக்க இளம் வீரரான ஸ்டப்ஸ் 31 ஓட்டங்களைப் பெற்று அக்ஷர் பட்டேலின் சுழலில் போல்ட் ஆகி வெளியேறினார். பின்னர் வந்த கிளாசன் பாண்டியாவின் ஓவரில் சிக்ஸ் அடித்து ஓட்டக்கணக்கை ஆரம்பித்தார்.

தொடர்ந்து கிளாசன் அதிரடியில் அசத்த தென்னாபிரிக்க அணி 100 ஓட்டங்களை கடக்க இந்த ஜோடி 36 ஓட்ங்களைப் பெற்றிருந்த நிலையில் நம்பிக்கை கொடுத்த டி கொக் 39 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். அடுத்து கிளாசனுடன் இணைந்த மில்லர் 6 மற்றும் 4 ஓட்டங்களுடன் கணக்கை ஆரம்பிக்க அதிரடியின் மிரட்டிய கிளாசன் அக்ஷர் படேல் வீசிய 15ஆவது ஓவரில் 4,6,6,4,2 என அடித்துத் துவைத்தர். இதனால் தென்னாபிரிக்க அணி 15.2 ஓவரில் 150 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்த போட்டியில் 17ஆவது ஓவரை ஹர்திக் பாண்டியா வீச முதல் பந்திலே அதிரடியில் மிரட்டிய க்ளாசன் 5 ஆறு ஓட்டங்கள் 2 நான்கு ஓட்டங்கள் அடங்களாக 27 பந்துகளில் 52 ஓட்டங்களுடன் பாண்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஜன்சென் பும்ரரின் வேகத்தில் 2 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். இறுதியில் 12 பந்துகளுக்கு 20 ஓட்டங்கள் தேவையாய் இருந்தது தென்னாபிரிக்க அணிக்கு.

19ஆவது ஓவரை வீசிய அர்ஸ்தீப் சிங் வெறும் 4 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுக்க தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு 6 பந்துகளில் 16 ஓட்டங்கள் என்ற நிலை ஏற்பட்டது. இந்திய அணி சார்பில் இறுதி ஓவரை ஹர்திக் பாண்டியா வீசினார். அவ் ஓவரின் முதல் பந்தில் மில்லர் மிட் ஓப் திசையில் உயர்த்தி அடிக்கை அதை அற்புதமாக சூரியகுமார் யாதவ் பிடியெடுக்க 21 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார் மில்லர். 2ஆவது பந்தில் ரபாடா 4 ஓட்டங்களை அடிக்க மைதானம் அமைதி ஆனது. அடுத்த பந்தில் பை மூலம் ஒரு ஓட்டம் கிடைக்கப் பெற 3 பந்துகளில் 11 ஓட்டங்கள் தேவையானது. 4ஆது பந்தில் ஒரு ஓட்டம் மஹராஜால் பெறப்பட்டதுடன், அடுத்தபந்து வைட்போலாக , 5ஆவது பந்தில் ரபாடா பிடிகொடுத்து வெளியேற ,1 பந்திற்கு 9 ஓட்டங்கள் தேவையாய் மாறியது. இறுதிப் பந்தில் நேர்டிச் 1 ஓட்டத்தை பெற தென்னாபிரிக்க அணியால் 20 ஓர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

இதனால் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி 7 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்று 9ஆவது ரி20 உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. பந்துவீச்சில் ஹர்திக் பாண்டியா 3 விக்கெட்டுக்களையும், பும்ரா மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இக் கிண்ணத்துடன் இந்திய அணி 2ஆவது முறையாகவும் ரி20 உலகக்கிண்ணத்தை கரம் பற்றி அசத்தியது.




## வெகு விமரிசையாக இடம்பெற்ற "தமிழன்" பத்திரிகையின் நான்காவது ஆண்டு பெருவிழா



**(ஐ. ஏ. காதிர் கான், அஷ்ரப் ஏ. சமத்)**

*"தமிழன்" பத்திரிகையின் நான்காவது ஆண்டு பெரு விழா, நேற்று (28) வெள்ளிக்கிழமை மாலை, கொழும்பு - வெள்ளவத்தை, இராமகிருஷ்னன் மண்டபத்தில், "தமிழன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா தலைமையில் நடைபெற்றது.*

*இந் நிகழ்வில், "லிப்பர்ட்டி பப்பிளிகேஷன்" தலைவர் திலித் ஜயவீர கலந்த கொண்டார்.*

*இச்சிறப்பு விழா நிகழ்வில், கல்விப் பணிக்காக கந்தையா பத்மநாதன், கலைப் பணிக்காக திருமதி வைத்திஜயந்திமலா, ஊடகப் பணிக்காக வீ. தனபாலசிங்கம், தமிழ் இலக்கியப் பணிக்காக அல் அஸூமத், சமுக சேவைப் பணிக்காக புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டு பாராட்டப் பட்டனர்.*

*அத்துடன், கலை நிகழ்ச்சிகளும் மாணவர்களுக்கு விசேட வினாப் பொதி, சிறந்த மாணவருக்கான "தமிழனின்" உதவித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள், "இசை வீனை" பரதநாட்டிய நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன.*

*பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், இராதாகிருஸ்னன், ரிஷாத் பதியுத்தீன், மனோ கனேசன், சுமந்திரன், வட மேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் "தமிழன்" பத்திரிகையில் பணிபுரியும் ஊழியர்கள், அபிமானிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.*



www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JUNE 30 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## பீ.எச்.சின் கவலையான செய்தி; நமக்குணர்த்தும் பாடம்

தமிழ் பேசும் மக்கள் வாழும் தேசமெங்கும், அண்மையில் கவலையுடன் பேசப்பட்ட ஒரு விடயம், பிரபல அறிவிப்பாளர் பி எச் அப்துல் ஹமீத் குறித்து, வெளியாகிய அந்த செய்தியாகும்.

இது போன்ற ஒரு செய்தியை, பி எச் அப்துல் ஹமீத் கடந்த காலங்களில் எதிர்கொண்டு இருந்தாலும், சமூக ஊடகங்கள் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய கட்டத்தில், அவ்வாறான ஒரு செய்தி உலக மக்களை ஆச்சரியத்திலும், கண்ணீரிலும் மூழ்கடித்தது என்றால் மிகையாகாது.

சோகம் நிறைந்த அந்த செய்தி, வெளியான சில நிமிடங்களில், அப்துல் ஹமீத் சமூக ஊடகங்களில், ஒரு காணொளியை வெளியிட்டார் "நான் இறக்கவில்லை, எந்த ஒரு செய்தியையும் தீர விசாரித்து நிச்சயப்படுத்திய பிறகு பதிவிடும் ஊடகப் பண்புதான் இறந்து விட்டது" என அவர் அந்த காணொளி மூலம் அறிவித்தார்

அதன் பின்புதான் அவரை விரும்பும், அவரது குரலை நேசிக்கும், அவரது தமிழ் உச்சரிப்பை சுவாசிக்கும் உலகளாவிய தமிழ் பேசும் மக்கள் நிம்மதி அடைந்தனர்

இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், இந்த ஒரு செய்தியையும் தீர விசாரித்து, நிச்சயப்படுத்திய பின்பு, நாம் அதனை பகிர வேண்டும் என்பதாகும். செய்தி சேகரிப்பவர்களும், பதிவேற்றுபவர்களும், அதனை பகிர்ந்து கொள்ளும் வாசகர்களும் தீர விசாரித்து, உறுதிப்படுத்திய பிறகே, எதனையும் பகிர்வது மிக முக்கியமாகும். இதை எப்போதும் கடைபிடிப்போம்.

## பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.

எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜுலை 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**மின்னஞ்சல்:**
moonmedia178@gmail.com

**Whatsapp / Call:**
070 239 7210

# எனசல்கொல்ல வித்துபதீப கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கட்டிடங்கள் அங்குரார்ப்பணம்



கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல வித்துபதீப மத்தியக் கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி செயலகமும், அதிபர் காரியாலயமும் அண்மையில் வெகு விமர்சையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் 75வது வருட நிறைவு பவள விழா நினைவாக பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த கொழும்பு கொமோடிடிஸ் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி எம்.ஸி. பஹார்தீனின் பூரண நிதியுதவியுடன் கல்வி அபிவிருத்தி செயலகமும், அதிபர் காரியாலயமும் புனரமைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் கௌரவ அதிபர் அல்ஹாஜ் எம். ஜீ.எம். நயீமுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவி கொழும்பு அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் நாஹூர் உம்மா காதர் ஜே.பி., கிளையின் செயலாளர் முஸ்லிம் விவாகப் பதிவாளர் நாஹூர்ரஹீம் ஜே.பி. உட்பட கொழும்புக் கிளையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் புதிதாக புனரமைக்கப்பட்டுள்ள செயலகப் பெயர்ப் பலகையினை பிரதம அதிதியின் பாரியார் திருமதி ஹாஜியானி நூர் ஸஹ்ரியா பஹார்தீன் திரை நீக்கம் செய்து வைத்தார்.



# ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரம்

# SRI LANKA MUSLIM MEDIA FORUM

1995 ஆம் ஆண்டு 39 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அதன் 3 தசாப்த பயணத்தில் முஸ்லிம் சமூகத்தின் ஊடக வளர்ச்சிக்கும், சுதந்திர ஊடகச் செயற்பாடுகளுக்கும் பங்காற்றிய ஓர் அமைப்பாக சமூகத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்திற்கான ஊடகங்களை உருவாக்குவதற்கு தேவையான ஆளனியினர்களையும் உருவாக்கும் பெரும் பணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அளப்பெரும் சேவையை ஆற்றி வருகின்றது.






Conference Chair
Al Haj. N.M. Ameen
President - SLMFF

## Our Guest



*Chief Guest*
**Mr. Marc-André Franche**
Resident Coordinator, United Nations,
Sri Lanka



*Guest of Honour*
**His Excellency Dr. Alireza Delkhosh**
Ambassador - Islamic Republic of Iran,
Sri Lanka



*Guest Speaker*
**Mr. K. A. M. Muhammed Abubacker Ex. MLA**
State General Secretary -
Indian Union Muslim League
& Publisher & Director, Manichudar Tamil Daily



*Key Note Speaker*
**Mr. M. L. M. Mansoor**
Social Activist

# 27 வருடாந்த மாநாடு

# Annual General Meeting

Postal Department Auditorium
310, D.R. Wijewardena Mawatha,
Colombo - 10.

Sunday 30th June 2024 at 9.30 am

## 27வது மாநாட்டில் கௌரவிக்கப்படும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள்



மெனிக் டி சில்வா



புர்கான் பீ இப்திகார்



அமீர் ஹுசைன்



சித்தீக் ஹனீபா



சுஹைப் எம். காசிம்



ஸ்ரீ கஜன்



ஆர்.பி. ஹரன்



பஷீர் அப்துல் கையூம்



ஸிறாஜ் எம். சாஜஹான்



எம்.எம்.எம். பஷீர்



ஏ.ஏ.எம். றிப்தி அலி

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27வது வருடாந்த மாநாட்டில் சன்டே ஜலன்ட் பத்திரிகையின் ஆசிரியர் மெனிக் டி சில்வா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். அதே நேரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் திருமதி புர்கான் பீ இப்திக்கார், வசந்தம் தொலைக்காட்சியின் சிரேஷ்ட செய்தி முகாமையாளர் எம்.சித்தீக் ஹனிபா, பிறை எப்.எம்.வானொழி தலைமையதிகாரி பசீர் அப்துல் கையும், மூத்த ஊடகவியலாளர்களான சுஹைப் எம். காசீம், அமீர் ஹுசைன், தென் பிராந்திய ஊடகவியலாளர் எம்.எம்.எம் பசீர், வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீகஜன், தினக்குரல் ஆசிரியர் ஆர்.பி ஹரன், உதயம் செய்தி ஆசிரியர் ஸிராஜ் எம். சாஜகான ஆகியோரும் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். மேலும், இந் நிகழ்வில் போரத்தின் உதவித் தலைவர் ஊடகவியலாளர் றிப்தி அலி தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஊக்குவிப்புக்காக விசேடமாக கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 30ஆவது ஆண்டை நோக்கி.... ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்



கலாபூஷணம்
எம்.எம். நிலாம்
(உபதலைவர் முஸ்லிம் மீடியா போரம் )

27ஆவது வருடாந்த மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை தபால் கேட்போர்கூட மண்டபத்தில் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறுகின்றது அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

இலங்கை ஊடகத்துறையில் 29 ஆண்டுகளில் நிறைவு செய்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அதன் 27ஆவது வருடாந்த மாநாட்டை இன்று ஞாயிற்றுக்கிழமை தலைநகர் கொழும்பில் நடத்துகின்றது. அதன் இந்த நீண்ட தூ ரப்பயண பாதையை சற்று பின்னோக்கிப் பார்க்க எண்ணி ஸ்தாபக உறுப்பினர் என்ற அடிப்படையில் நடந்துவந்த பாதையில் திரும்பிப் பார்க்கின்றேன்.

1995ஆம் ஆண்டு 34 உறுப்பினர்களுடன் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்திருந்த மர்ஹூம் அப்துல் சேர் டபள்யூ. எம். அமீர் அவர்களின் ரன்முத்து ஹோட்டலில் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் மீடியா போரம்.

எப்போதும் முஸ்லிம் சமுதாயத்திற்காக குரல் கொடுக்கும் சர் அமீர் ஊடகவியலாளர்களுடன் நெருக்கமான நட்பைபேணும் சிறந்த மனிதராவார். தனது ரன்முத்து ஹோட்டலை பல ஆண்டுகளாக எவ்வித எதிர்பார்ப்புமின்றி இலவசமாகவே தந்துதவினார். என்ற அடிப்படையில் அண்ணாரை இந்த வேலையில் நினைத்துப் பார்க்கின்றேன்.

அன்று 34 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட முஸ்லிம் மீடியா போரம் இன்று ஆளவிருட்சமாக 900 அதிகமான உறுப்பினர்களை உள்வாங்கி பேரியக்கமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

நாடெங்கும் ஊடகவியலாளர்களாக செயல்பட்டு வரும் முஸ்லிம் ஊடகவியலாளர்களை ஓரணியில் திரட்டும் அந்த முயற்சி குறுகிய காலத்திற்குள் பேரியக்கமாக பரிணமித்தது. அதன் முதல் தலைவராக முதுபெரும் ஊடகவியலாளரான எஸ். பி. சி. ஹலால்தீன் தேரிவு செய்யப்பட்டதோடு, செயலாளராக என். எம் .அமீனும், பொருளாளராக மர்/ஹம் ஏ. எல். எம். சனூனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் சுமார் மூன்றாண்டுகளுக்குள் நாட்டின் பரந்துபட்ட பிரதேசங்களிலும் ஊடகத்துறையில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்ட 34 பேரும் அன்று செயற்குழு உறுப்பினர்களாக இணைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட்டதாகும்.

தேசிய நீரோட்டத்தில் முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலம் குறித்து சிந்தித்து முஸ்லிம் மீடியா போரத்தை தனியான ஊடக இயக்கமாக அமைத்துக் கொண்டோம். தேசிய மற்றும் தனியார் ஊடகங்களில் உள்ளக ஊடகவியலாளர்களாகவும், பிராந்திய செய்தியாளர்களாகவும், ஊடகத்துறை அனுபவம் கொண்ட சகலரையும் மிகக் குறுகிய காலத்தில் அணி திரட்ட முடிந்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

மூன்றாவது மாநாட்டின் போது தலைவராக எஸ். பி. சி. ஹலால்தீன் தலைவராக தொடர்ந்த நிலையில், செயலாளராக எம். பி. எம். அஸ்ஹரும், பொருளாளராக என், எம், அமீனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று முதல் இன்று வரை முஸ்லிம் மீடியா போரதுக்கென தனியான காரியாலயம் எதுவுமின்றி நடமாடும் செயலகமாகவே இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கின்றமை கவலை தரக்கூடிய ஒன்றாகும். எனினும் இந்த பேரியக்கம் தொய்வின்றி இயங்கிக் கொண்டிருப்பதில் அனைத்து உறுப்பினர்களதும் பங்களிப்பென்றால் மிகயாகாது. 27 மாநாடுகளை வெற்றிகரமாக நடத்த முடிந்தமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இடையில் நாட்டில் ஏற்பட்ட ஓர்சில நெருக்கடிகளின் போது இயங்க முடியாத நிலை காணப்பட்ட போதும் அவற்றை சவாலாக ஏற்று முகம் கொடுத்து முன்னேற முடிந்தமை பாராட்டத்தக்கதாகும். இடையில் இரண்டு தடவைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இரண்டு மாநாடுகளை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது இதன் காரணமாக 27 மாநாடுகளை நடத்தியுள்ளோம்.

அரச ஊடகத் திணைக்களத்திலும் ஊடக நிறுவனங்களிலும் இருந்து அடையாள அட்டையை பெற்றுக்கொண்ட ஊடகவியலாளர்களை இயக்கத்தின் உறுப்பினர்களாக அங்கீகரித்து இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்களே இயக்கத்தின் உறுப்பினர்களாவர். அண்மைக்காலத்தில் சமூக ஊடகங்களையும் உள்வாங்குவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களையும் இணைத்துக் கொள்ளும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மீடியா போரத்தின் கோரிக்கைக்கு அமைய கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக டிப்ளோமா பட்டப்படிப்புக்கு இளம் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பளிக்க பேராசிரியர் ஜே. பி. திசாநாயக்க இணக்கம் தெரிவித்து ஒரு வருடகால வெளிக்களப் பயிற்சிக்க எடுக்கப்பட்டனர். இதன் முதற்கட்டமாக தெரிவான ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொடுக்கவும் முஸ்லிம் மீடியா போரம் முன்வந்தது. இதுவரையில் இப்பயிற்சியில் சுமார் 1000 பேர் ஊடக டிப்ளோமா பட்டத்தை பெற்றுள்ளனர்.

அதேபோன்று சவூதி அரேபிய பல்கலைக்கழகத்தில் ஒரு மாத கால பயிற்சிக்கும் 2001 ஆம் ஆண்டில் 10 பேருக்கு வாய்ப்பளிக்கப்பட்டதோடு அவர்களுக்கு அந்த வருட புனித ஹஜ்ஜை நிறைவேற்றும் வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் சவுதி மன்னரின் விருந்தாளிகளாகவே கடமையை நிறைவேற்ற வாய்ப்புக்கிட்டியது. எதிர்காலத்தில் இந்த பயிற்சியை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் மீடியா போரம் ஈடுபாடு காட்டிவருகின்றது.

அத்துடன் துருக்கி அரசாங்கம் எமது உறுப்பினர்கள் சிலருக்கு ஊடக உபகரணங்களை பெற்றுக் கொடுக்க முன்வந்தது. இதன் பயனை பல உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தததுடன் இரண்டு ஊடகவியலாளர்களை துருக்கி நாட்டுக்கு அழைத்து அவர்ளின் ஊடக நிறுவனங்களின் பணிகளை ஆராய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் தமிழகத்தில் ஊடகதினருடனான களப்பணியாற்றும் வாய்ப்பை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பெற்றுத்தந்தது. இதன்போது பத்துக்கும் மேற்பட்டோர் தமிழகம் சென்று கருத்துகளை பகிர்ந்துகொள்ள முடிந்தது. அதற்கு உதவியை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கும், அதன் தலைவர் பேராசிரியர் காதர் முகைதீனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதுமட்டுமன்றி எமது இயக்க உறுப்பினர்கள் சிலர் பாகிஸ்தான், நேபாளம், அமெரிக்க உட்பட பல நாடுகளுக்கும் சென்று களப்பணிகளில் ஈடுபட்டதையும் இங்கு பதிவு செய்ய வேண்டியுள்ளோம்.

முஸ்லிம் மீடியா போரம் இதுவரையில் நாட்டில் 90க்கும் மேற்பட்ட ஊடக கருத்தரங்குகளை மேற்கொண்டுள்ளது. பிராந்திய ஊடகவியலாளர்களும், பாடசாலை மாணவர்களும் இதன் பயனைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இக்கருத்தரங்குகளில் இன வேறுபாடின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களும், பாடசாலை மாணவர்களும் தோற்றியுள்ளனர்.

அண்மையில் நவீன ஊடக அறிவுக்கான பாடங்களை பயிற்சியளிக்கும் கருத்தரங்கு திருகோணமலை ,அநுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு போரம் தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் மீடியா போரத்தின் கடந்து வந்த பாதையில் சில சுவடுகளை இங்கு முன்வைத்துள்ளேன். அடுத்து வரும் காலத்தில் இதன் பணிகளை விரிவாகவும் பரந்துபட்ட ரீதியிலும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. தற்போதைய மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீனின் வழிகாட்டலில் மீடியா போரம் வெற்றி நடைபோடுகின்றது. நிர்வாகிகள் உறுப்பினர்கள்

உள்ளிட்டோரின் ஒத்துழைப்பையும், எமது ஊடகங்கள் அளித்துவரும் ஒத்துழைப்பிணையும் இங்கு நினைவு கூறுகின்றோம்.


2025 ஆம் ஆண்டில் எமது பேரியக்கம் 30ஆவது ஆண்டை எட்டுகின்றது. எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகளை புரிவதற்கு இயக்கத்திற்கும், அதன் நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கும் இறைவன் துணை புரிய பிரார்த்திப்போமாக!

ஏனைய ஊடகங்களோடு கரம்கோர்த்து நல்லதொரு தேசம் பணிக்கு முஸ்லிம் மீடியா போரத்தையும் இணைத்துக் கொள்வோமாக!.




நாச்சியாதீவு
பர்வீன்

# இக்பால் அலியின் 'காலத்தின் கால்கள்'




நாடறிந்த ஊடகவியலாளர் , கவிஞர், விமர்சகர், போன்ற பல்வேறுபட்ட துறைகளில் இயங்கி வரும் இக்பால் அலியின் புதிய வெளியீடாக வந்துள்ளது 'காலத்தின் கால்கள்' எனும் திறன் நோக்கு நூல்.

இக்பால் அலி, தன் தமிழிலக்கியப் பணியில் நூற்றுக்கணக்கான நூல்களுக்கு திறன் நோக்குகள்ஃ விமர்சனங்கள் எழுதியுள்ள போதும், இந்நூலில், அவர் தேர்ந்தெடுத்த 34 நூல்களின் விமர்சனஃதிறனாய்வு கட்டுரைகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. தனக்கே உரித்தான ஓர் அகன்ற பார்வையில் இந்நூல்களை எடை போட்டுப் பார்த்துள்ளார் இக்பால் அலி. இக்கட்டுரைகள், சுடர் ஒளி, நயனம்,ஞாயிறு தினக்குரல், தினகரன் வாரமஞ்சரி, தீம்புனல் ஆகியவற்றில் பிரசுரம் பெற்றவை ஆகும்.

இக்பால் அலியின் இலக்கியப் பணிகளை, அவரது ஊடகப்பணி பெருமளவு விழுங்கிய போதிலும் அவற்றிலிருந்து விடுபட்டு இலக்கியத்துக்கும் நேரம் ஒதுக்கி இந்நூலை அவர் வெளிக் கொணர்ந்திருப்பது பாராட்டுக்குரியது. "..

எனது, மனதைத் தொட்ட சில நூல்களை நுகர்ந்து சுவைத்து அந்நூல்களில் மறைந்துள்ள மாபெரும் அழகுகளை பளிச்சென்று சூரிய வெளிச்சம் போல தெரியுமளவுக்கு துலங்கச் செய்துள்ளேன் ." என்று கூறுகிறார்.

எம்.ஏ. நுஹ்மானின் 'கவிஞன்' கவிதை இதழ், சாதியா பௌசரின்,'மலையக கவிதைகளில் பெண்களும், சிறுவர்களும்' , ரா.நித்தியானந்தனின், 'இரவைத் தேடும் நிழல்', பண்டிதர். ச.வே. பஞ்சாட்சரத்தின் 'விலங்குப்பறவை', ஜின்னாஹ் ஷரிபுத்தீனின், 'பனிமலையின் பூபாளம்', எஸ்.ஏ.இஸ்ஸத் பாத்திமாவின் 'புதையலைத் தேடி', எம்.ஐ.எம். அஷ்ரப்பின் 'இன்னும் உயிரோடு', 'ஆசிரியம் ஓர் இறைவணக்கம்', எஸ். ஆர். தனபாலசிங்கத்தின் 'நீங்களும் எழுதலாம்',

தீரன்.ஆர்.எம். நௌஷாத்தின் 'முத்திரையிடப்பட்ட மது', ஏ.பீர்முகமதுவின் 'இளம்பிறை எம்..ஏ. ரஹ்மான்- இருட்டடிப்புக்களை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர்', பவானியின் 'சில கணங்கள்', பேராசிரியர்.எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி வீ. அமீர்தீன், ஏ.ஜே.எஸ். வசீல் ஆகியோரின், 'இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும்', மஷூரா சுஹூர்தீனின் 'நதிகளின் தேசிய கீதம்', பாவலர் பஸில் காரியப்பரின் 'ஆத்மாவின் அலைகள்', எம்.எம்.எம். நூறுல் ஹக்கின் 'சிறுபான்மையினர் சில அவதானங்கள்', எஸ்.நஸீருதீனின் 'நல்லதோர் வீணை செய்தே', தெ.கி.ப. கழகம் வெளியிட்ட பேராசிரியர் ஆ.மு.உவைஸ் பற்றிய சிறப்புமலரான 'மர்கசி', ரா. நித்தியானந்தனின் '19ஆம் நூற்றாண்டின் இந்தியத் தமிழரின் இலக்கை நோக்கிய அசைவியக்கமும், தள்ளல்-இழுவை காரணிகளின் செயற்பாடும்', நுஹா பின்த் ரிஸானாவின் 'யூஜி', மைக்கல் கொலினின் 'சிலுவைகளே சிறகுகளாய்', மருதூர் கொத்தனின் 'மோகனம்', எஸ்.யூ. கமர்ஜான் பீவியின் 'நான் மூச்சயர்ந்த போது', நா.வை. குமரி வேந்தனின் 'தமிழ் எழுச்சி', வெலிகம ரிம்ஸா முகம்மதின் 'எரிந்த சிறகுகள்,' கலாநிதி செ. சுதர்சனின் 'காலிமுகத்திடல்', நா.வை. குமரி வேந்தனின் 'மொழி-பண்பாடு-வரலாறு, மீட்பு-காப்பு-வளர்ப்பு', இரா.மகேஸ்வரனின் 'அமைதி வழியும் மதுர மொழியும்', மருதநிலா நியாஸின் 'வேர்கள் அற்ற மனிதர்கள்', இராசையா மகேஸ்வரனின் 'ஆண்ட பரம்பரை', நா.வை. குமரி வேந்தனின் 'தமிழியற் சான்றோர்', கவிஞர் யோகுவாவின் 'கரிகாட்டுப் பூக்கள்', முப்தி யூஸ/ப் ஹனிபாவின் ஏ.பீர்முகம்மதின் 'திறன் நோக்கு', வேலணையூர் ரஜிந்தனின் 'பேரன்பின் படிமங்கள்'

இவையே இக்பால் அலி தேர்ந்தெடுத்த நூல்களின் பட்டியல் ஆகும்.

இவ்வளவு பெறுமதிக்க நூல்கள் பற்றிய குறிப்புக்கள் அடங்கியுள்ள இந்நூலில், ஆங்காங்கே காணப்படும் சில எழுத்துப்பிழைகள் வாசிப்பில் உறுத்துகின்றது என்பதையும், பொருளடக்கத்தில் நூலாசிரியர்களின் பெயர்களோடு நூல் பெயரையும் பக்க எண்ணையும் குறிப்பிட்டிருந்தால் விரைவான தேடலுக்கு உதவியாய் இருந்திருக்கும் என்பதையும், கட்டுரை ஆரம்பத்தில் ஒவ்வொரு நூலினதும் முன் அட்டைப்படத்தை இட்டிருந்தால் இன்னும் இதன் அழகுப்பெறுமானம் கூடியிருக்கும் என்பதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அம்னா பதிப்பகம் மூலம் அழகிய அட்டையுடன் 155 பக்கங்களுடன் கனதியாக வெளியாகி ரூ. 800ஃ- விலையில் கிடைக்கிறது இந்நூல். நூலின் பின்னட்டைக் குறிப்பை தீம்புனல் ஆசிரியர் சூரன்.ஏ. ரவிவர்மா அவர்கள் எழுதியுள்ளார். தேவையானோர், 0763744700 இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

---

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....



### மதுவும் குதாட்டமும், தர்மமும்...

(நபியே!) மதுவைப்பற்றியும் சூதாட்டம் பற்றியும் உங்களிடம் கேட்கின்றனர் (அதற்கு) நீங்கள் கூறுங்கள் அவ்விரண்டிலும் பெரும் பாவங்களும் இருக்கின்றன.மனிதர்களுக்குச் சில பயன்களும் இருக்கின்றன. ஆனால் அவைகளில் உள்ள பாவம் அவைகளில் உள்ள பயனைவிட மிகப் பெரிது அன்றி (நபியே! தர்மத்திற்காக) எவ்வளவு செலவு செய்வதென உங்களிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீங்கள் (அவசியத்திற்கு வேண்டியது போக) மீதமுள்ளதை செலவு செய்யுங்கள்) எனக் கூறுங்கள். (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் இம்மை மறுமையின் நன்மைகளை கவனத்தில் வைத்துக்கொள்வதற்காக உங்களுக்கு அல்லாஹ் தன்னுடைய வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றான். (2:219)

அநாதைகளின் விஷயத்தில் மோசம் செய்யாதீர்கள்:-

(நபியே!) அநாதைகளைப் (வளர்ப்பதைப்) பற்றியும் உங்களிடம் கேட்கிறார்கள் (அதற்கு) நீங்கள் கூறுங்கள்:" அவர்களைச் சீர்திருத்துவது மிகவும் நன்றே! மேலும் நீங்கள் அவர்களுடன் கலந்து வசித்திருக்க நேரிட்டால் (அவர்கள்) உங்களுடைய சகோதரர்களே! (ஆதலால் அவர்களுடைய சொத்தில் இருந்து அவசியமான அளவு உங்களுக்காகவும் செலவு செய்து கொள்ளலாம்) ஆனால் (நன்மை செய்வோம்) எனக் (கூறிக் கொண்டு) தீமை செய்பவர்களை அல்லாஹ நன்கறிவான். அல்லாஹ் நாடினால் உங்களை மீள முடியாத) கஷ்டத்திற்குள்ளாக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் (எவ்விதமும் செய்ய) வல்லவனும் நுண்ணறிவுடையவனுமாக இருக்கின்றான் (ஆகவே அநாதைகள் விஷயத்தில் மோசம் செய்யாது மிக்க அனுதாபத்துடனும் நீதமாகவும் நடந்து கொளருங்கள்) (2:220)

(இப்னு தௌபீக் ஆலீம்)

---



துருக்கியின் புதிய தூதுவரை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்

---

கொழும்பு இரத்மனலானையில் அமைந்துள்ள சக்தி சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்த கலாநிதி.வி.ஜனகன் அங்குள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்ததுடன், மாணவர்களின் எதிர்கால கல்வி நிலைமை தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இந்த சக்தி இல்லத்திற்கு ஜனகன் அவர்களும் அவரது குடும்ப உறுப்பினர்களும் நீண்ட காலமாக தங்களது உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கலாநிதி வி.ஜனகன் அவர்களுடைய தாயார்.ரூபி விநாயகமூர்த்தியும் கலந்து சிறப்பித்தார்.



---

## தர்காநகரில் திக்வெல்லை கமாலுடன் ஓர் உரையாடல் நிகழ்வு



(பீ.எம். முக்தார்)

பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் அடுத்த நகர்வாக "நமது சிறுகதைகள் - திக்வெல்லை கமாலுடன் ஓர் உரையாடல்" எனும் நிகழ்வு, ஒன்றியத்தின் ஆலோசகர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களின் தலைமையில் எதிர்வரும் 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு தர்கா நகர் அல்ஹம்றா மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது. இது சிறுகதைகள் எவ்வாறு எழுதுவது? என்பது தொடர்பான ஒரு கருத்தரங்காக அமையவுள்ளது.

மேலும் பிராந்தியத்தில் எழுத்து, வாசிப்பு என்பவற்றை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனேயே இவ்வாறான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வருகின்றார்கள். இதன் நோக்கம், இளையவர்கள் குறிப்பாக மாணவர்கள் இத்துறை சார்ந்த நுட்பங்களைக் கற்றுக் கொள்வதனூடாக தமது திறன்களை வளர்த்துக்கொள்ள களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே.

எனவே, பிராந்தியத்தின் சகல முஸ்லிம் பாடசாலை மாணவர்களும் இந் நிகழ்வில் பங்குபற்றி பலனடைவார்கள் என்று எதிர் பார்ப்பதாக ஒன்றியத்தின் செயலாளர் பஸ்லி ஹமீட் அவர்கள் தெரிவித்தார்.

# உலகின் கண்கள் ர:பாவின் மீதே....
# தீர்வு கிடைக்குமா ?






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

உலகைப் புரட்டிப்போட்ட புகைப்படங்களின் வரிசையில் அண்மையில் வெளியான யுடட நுலநள ழுெ சுயகயா படத்திற்கு முக்கிய இடம் உண்டு. பலஸ்தீன் மீது இஸ்ரேல் நடத்திவரும் கொடூரமான மனிதாபிமானமற்ற இன அழிப்பு குறித்த கவன ஈர்ப்பை இந்தப் படம் பெற்றுத் தந்துள்ளது. ரஃபா இங்கு கொடூரத்தின் உச்சமாக வடிவமைக்கப்பட்டாலும் பிரச்னை /பலஸ்தீன் குறித்தது. எனவே இந்தப் படம் உலகின் கூடுதல் கவனத்தைப் பெற்றது.

இந்தப்படம் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் கருவியில் வடிவமைக்கப்பட்ட படம். சற்றேறக்குறைய 5 கோடிக்கும் மேல் இன்ஸ்டாக்ராமில் பார்க்கப்பட்டிருக்கிறது. அறிவியல் ஆசிரியை ஜிலா அப்கா, கல்லூரி மாணவரும் புகைப்படக் கலைஞருமான அமீருல் ஷா என்ற இரண்டு மலேசியர்களால் தனித்தனியாக, சில நாள்கள் இடைவெளியில் உருவாக்கப்பட்டது இப்படம். இலட்சக்கணக்கான ஃபலஸ்தீனர்களின் இடப்பெயர்தலுக்குக் காரணமான ரஃபா நிகழ்வை உலக மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் வடிவமைத்து இருக்கிறார்கள். ஆனால், இவ்வளவு பெரிய வரவேற்பைப் பெறும் என்று அவர்கள் நினைத்துக் கூட பார்க்கவில்லை. இருவரின் எண்ணமும், ஃபலஸ்தீன மக்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்க வேண்டும் என்பது தான்.

கடந்த மாதம் காசாவின் ரஃபாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 45 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காஸாவின் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இருக்கும் ரஃபாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்ட சில நாட்களுக்குப் பிறகு இது வந்தது. முன்னதாக இஸ்ரேலின் ஊடுருவலுக்கு முன் தங்குமிடம் தேடி வந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் உள்ளனர், பலர் வெளியேறியுள்ளனர்.

இந்த தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் உறுதி செய்து, ஹமாஸ் அமைப்பின் மீது தாக்குதல் நடத்தி இரண்டு மூத்த ஹமாஸ் போராளிகளை கொன்றதாக கூறியது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒரு "துக்ககரமான தவறு" இழைக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டார். "அப்பாவி பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருக்க எங்களின் அதிகபட்ச முயற்சிகள் இருந்தபோதிலும், ,ஒரு சோகமான தவறு ஏற்பட்டது," என்று இஸ்ரேல் பாராளுமன்றத்தில் உரையாற்றிய நெதன்யாகு கூறினார். "நாங்கள் சம்பவம் குறித்து விசாரித்து வருகிறோம், இது எங்கள் கொள்கை என்பதால் ஒரு முடிவைப் பெறுவோம்," என்று அவர் கூறினார். பாவிகள் நீதி வழங்கினால் எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அதே பேச்சு தான் நெதன்யாகுவின் பேச்சு என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை.

வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து பலத்த காயமடைந்தவர்களின் படங்கள் மற்றும் எரிந்த உடல்களின் படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகின. ஆர்வலர்களும் மனிதாபிமான அமைப்புகளும் போதுமான மனிதாபிமான உதவியின்றி நெரிசலான அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களின் இக்கட்டான நிலையை கவனத்தை ஈர்ப்பதற்காக "யுடட நுலநள ழுெ சுயகயா" என்ற படத்தை மையப் புள்ளியாகப் பயன்படுத்துகின்றனர். இப்பகுதியில் இஸ்ரேல் தனது தாக்குதல்களை முடுக்கிவிடுவதற்கு முன்பு, காஸாவில் மனிதாபிமான உதவிக்கான முக்கிய நுழைவுப் பகுதியாக ரஃபா இருந்தது. யுஐ ஆல் தயாரிக்கப்பட்ட படம், முழக்கத்தை உருவாக்க கூடாரங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் ரஃபாவின் கவனத்தை ஈர்க்கிறது. அறிக்கைகளின்படி, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிராந்தியங்களின் உலக சுகாதார அமைப்பின் அலுவலக இயக்குனர் ரிக் பீபர்கார்ன் ஒரு அறிக்கையை வெளியிட்டார், இது "ஆல் ஐஸ் ஆன் ரஃபா" என்ற முழக்கத்திற்கு உத்வேகம் அளித்தது.

காஸா என்ற நிலப்பரப்பு பல பகுதிகளை உள்ளடக்கியது. வடக்கிலிருந்து தெற்காக அமைந்திருக்கும் வடக்கு காஸா, ஜபலியா, மத்திய காஸா, தைய்ர் அல்பலாஹ், கான் யூனிஸ், ரஃபா பகுதிகள் தான் அவை.

முதன்முதலில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது வடக்குக் காஸாவில் தான். மக்கள் வான் வழி ஏவுகணைத் தாக்குதல்கள், தரைவழித் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல், மத்திய காஸாவிற்குள் நுழைந்தனர். சிலர் அவர்களின் உறவினர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் பயணம் செய்து உறவினர்களின் வீடுகளில் தங்கி தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

இஸ்ரேல் தன் கொடூரமான தாக்குதல்களை ஒவ்வொரு பகுதி யாகத் தேர்ந்தெடுத்து நடத்தி, வடக்கிலிருந்து தெற்குப் பகுதிக்குக் கொண்டு போய் இறுதிப் பகுதியான ரஃபாவின் பக்கம் தள்ளியது. மற்ற பகுதிகள் எல்லாம் சிதிலமடைந்து கட்டிடங்கள், வீடுகள் இடிக்கப்பட்டு அடையாளம் தெரியாமல் உருக்குலைந்து போயின.

மொத்தமே 63 சதுர கிலோ மீட்டர் பகுதியாக இருந்த ரஃபாவில், ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 22,200 நபர்கள் இருக்கும் மிகவும் ஒரு நெருக்கடியான பகுதியாக அது மாறிப்போனது. நியூயார்க் நகரத்தில் இருக்கும் மக்களின் சதுர கிலோமீட்டர் அளவை விட(11,300 நபர்கள் ஒரு சதுர கிலோமீட்டருக்கு) இரண்டு மடங்கு அதிகம். இந்தப் பகுதியில் மட்டும் 12 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட 6 இலட்சம் குழந்தைகள் அதில் அடங்குவர்.

இந்த 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தான். ரஃபாவின் மீதான தாக்குதல் பெரிய மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் என உலக நாடுகள் இஸ்ரேலை மார்ச் மாதம் எச்சரித்தன. மே மாதம் இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த பேச்சுவார்த்தை தொடங்கி அது இஸ்ரேலால் ஒப்புக் கொள்ளப்படாததால், கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அதையும் மீறி இஸ்ரேல் தன் தாக்குதல்களை ரஃபாவில் தொடங்கியது.

எகிப்து நாட்டின் எல்லையில் ரஃபாவில் இருந்து மக்கள் கடக்கும் சுங்கச் சாவடி, இஸ்ரேலிய பீரங்கிகளால் இடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. எல்லை மூடப்பட்டது. எந்த வித உதவிப் பொருட்களும் ரஃபாவிற்குள் வர அனுமதி மறுக்கப்பட்டது. பெட்ரோல் எரிபொருள், தண்ணீர், உணவுப் பொருட்கள், உதவிப்பொருட்களை ஏற்றி வந்த கண்டெய்னர் லாரிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கடந்த 6 வாரங்களாக நூற்றுக்கணக்கான மக்கள் கொத்துக்

கொத்தாக, குடும்பம் குடும்பமாகக் கொல்லப் பட்டார்கள். ரஃபாவில் ஆயிரக்கணக்கான அகதிகள் தங்கியிருந்த முகாமில், மக்கள் மீது தவறுதலாக ஏவுகணைகள் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் ஒப்புக்கொண்டது. அதில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் பிணங்கள் ரஃபாவெங்கும் நிரம்பிக் கிடந்தது. மக்கள் சொல்லொணாத் துயரை அடைந்தார்கள்.

இந்தத் தாக்குதலினால், அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பவிருந்த ஆயுதப்பொருட்களை தற்காலிகமாக நிறுத்தியது. ஆனால் இதுநாள் வரை அமெரிக்கா கொடுத்த வெடிகுண்டுகளை வைத்துக் கொண்டு, இஸ்ரேல் தனது தாக்குதல்களை நிறுத்தாமல், இடைவெளி இல்லாமல் நடத்தி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தது.

உலகப்புகழ் பெற்ற சினிமா கலைஞர்கள் தொடங்கி, பல முக்கிய ஆளுமைகள் இந்தப் படத்தை தங்களின் முகநூல் பக்கத்தில், இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு, தங்களது எதிர்ப்பைக் காட்டினார்கள். இது இந்தியாவிலும் பல கலைஞர்களைப் பாதித்து, ஃபலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வண்ணம் தங்களின் வலைதள பக்கங்களில் பதிவிட்டார்கள். அது வைரலாகி, பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி, இஸ்ரேலின் கோர கொடிய முகத்தைக் காட்டியதோடு மட்டுமல்லாமல், ஃபலஸ்தீன மக்களின் துன்பங்களுக்காகக் குரல் கொடுக்க வைத்தது. காஸாவில் வேறு எங்கும் செல்ல முடியாத அளவிற்கு, குழந்தைகளின் நகரமாக ரஃபா மாறிப்போனது. இதுவரை 15,000 குழந்தைகள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

ஐ.நாவின் யுனிசெஃப் அறிக்கை ரஃபாவின் இன்றைய நிலைமைகளை இப்படிப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'ஆயிரக்கணக்கான குழந்தைகள் நெருக்கடியில் ரஃபாவில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் காயப்பட்டு அல்லது நோய்வாய்ப்பட்டு அல்லது ஊட்டச்சத்து குறைந்து, பயங்கரமான அதிர்ச்சிக்குள்ளாகி அதனால் மனச்சிதைவுக்குள்ளாகி அல்லது கை கால்கள் போன்ற உறுப்புகளை இழந்த நிலையில் இருக்கிறார்கள்.

1. கண் பார்வைக் குறைபாடு உள்ள, பார்க்க, கேட்க, நடக்க, புரிந்து கொள்ள, கற்றுக்கொள்ள முடியாத நிலையில் 65,000 குழந்தைகள் இருக்கிறார்கள்.

2. இரண்டு வயதிற்கும் குறைவான 8000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு உடையவர்களாக இருக்கிறார்கள்

3. ஐந்து வயதிற்கும் (இருக்கின்ற பத்து குழந்தைகளில் 9 குழந்தைகள்) குறைவான 1,75,000 குழந்தைகள் ஒன்று அல்லது பல தொற்று நோய்களால் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

4. கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளும் மனதளவில் பாதிக்கப்பட்டு, உளவியல் ரீதியான சிகிச்சை தேவை உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இதுவரை காஸாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 36,550. படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை 82,959. ஒட்டு மொத்த காஸாவின் மூன்றில் இரண்டு மடங்கு மக்கள் (17 இலட்சம் பேர்), காஸாவின் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவான பகுதியில் நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருகிறார்கள். இதுவரை 10 இலட்சம் பேர் ரஃபாவை விட்டு வெளியேறி அல் மஸாவி, கான் யூனிஸ் பகுதிகளில் தஞ்சம் அடைந்து இருக்கிறார்கள். சுத்தமான தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டு, கடல் நீரையே தங்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வருகிறார்கள்.

5 இலட்சம் பேருக்கு 121 கழிவறைகள் மட்டுமே இருக்கின்றன. ஒரு கழிவறையை 4,130 நபர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும், பசி பட்டினியில் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவிப் பொருட்களை ஏற்றி வந்த கண்டெய்னர் லாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதில் இருக்கும் பொருட்கள் அழுகி வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு சில கண்டெய்னர்கள் அனுமதிக்கப்பட்டால், அதை ரஃபாவிற்குள் நுழைய விடாமல் இஸ்ரேலிய தீவிரவாதிகள் தடுத்து நிறுத்தி, அந்த உதவிப் பொருட்களை கண்டெய்னர் லாரிகளில் ஏறி எடுத்து சாலைகளில் வீசி எறிந்து நாசப்படுத்துகிறார்கள். லாரி டிரைவர்களைத் தாக்கி, மிரட்டி, இனி உள்ளே வரக்கூடாது என்று தடுக்கிறார்கள். கொடூர மனம் படைத்த அந்த யூத சியோனிஸத் தீவிரவாதிகள்.

ரஃபாவின் மீதான ஈவிரக்கமில்லாத கொடூரமான தாக்குதல்கள் உலக நாடுகளின் தலைவர்களின் மனதைப் பாதித்த காரணத்தால், தங்களின் கண்டனங்களை இஸ்ரேலுக்கு எதிராகத் தெரிவித்து வருகிறார்கள். ஸ்பெயின், நார்வே, அயர்லாந்து ஆகிய நாடுகள் ஃபலஸ்தீனை ஒரு நாடாக அங்கீகரித்து, தங்களது தூதரகங்களை ஃபலஸ்தீனின் மேற்குக்கரை பகுதியில் அமைத்து வருகின்றன. இதற்கு இஸ்ரேல் தனது கடும் கண்டனத்தை அந்த நாடுகளுக்குத் தெரிவித்தது.

ரஃபாவின் மீதான தொடர் தாக்குதல்களை நிறுத்த அமெரிக்க புதிய 3 கட்ட போர் நிறுத்த, அமைதித் திட்டத்தை அறிவித்து இருக்கிறது. பல நாடுகள் அந்தத் திட்டத்தை ஆதரித்தாலும், இஸ்ரேல் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒருவேளை இந்தத் திட்டத்தின் மூலம் போர் நிறுத்தம் ஏற்பட்டால் காஸாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இரத்தக்களறி நிறுத்தப்படும். ஃபலஸ்தீன மக்களுக்கு நிம்மதியும் அமைதியும் கிடைக்கும்.

## மனநலமும் ஆலோசனையும்

37



# பக்குவமான உள்ளம்

எமது மனம் பக்குவம் பெற்றதாக இருக்க வேண்டும் என்று விரும்பாதவர்கள் எம்மில் எவரும் இல்லை. பக்குவமான மனம் சட்டென்று உருவாகக் கூடியதல்ல. மனம் பக்குவம் அடைவதற்கான வழிமுறைகளை, நுட்பங்களை தேடித் தெரிந்து மனதை பயிற்றுவிப்பதன் மூலமே இந்த நிலையை அடையலாம்.

பக்குவமான மனம் என்றால் என்ன?

எமது மனதில் தோன்றும் தீய எண்ணங்களாலும் மனதிற்கு வெளியே நடக்கும் மோசமான அவ்வாறே பாவமான விடயங்களாலும் எங்கள் மனம் சஞ்சலமோ குழப்பமோ அடையாமல் மனதை சமநிலையில் வைத்திருப்பது மனப்பக்குவம் ஆகும். அதேவேளை நாம் சந்திக்கும் வெற்றியோ தோல்வியோ எதுவாயினும் அதை சமநிலையான மனதுடன் அனுபவிப்பதும் பக்குவமான மனதின் அடையாளமாகும்.

மனிதராக பிறந்து வாழும் எமக்குள் தீய எண்ணங்கள் வருவதில்லை என்று எவராலும் சொல்ல முடியாது.

நல்ல எண்ணங்கள் மட்டுமே எமக்குள் உருவாகின்றன என்று எவராலும் கூறவும் முடியாது. நல்ல எண்ணங்கள் மட்டுமே உருவாகின்றன என்றால் எமக்கு வாழ்வதற்கான வழிகாட்டல்கள் தேவையில்லை. நாம் எப்போதும் புனிதர்களாகவே வாழ்ந்து விடலாம்.

மனிதர்களாகிய எங்களுக்கு உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் பல விதங்களில் பல முறைகளில் தீங்கான எண்ணங்கள் ஏற்படுவது இயல்பானது. இவை தவிர்க்க முடியாதவை.

மனதுக்கு உள்ளே இருந்து வரும் தீய எண்ணங்களையும் வெளிப்புறமாக இருந்து வரும் சவால்களையும் சங்கடங்களையும் புரிந்து அவற்றால் பாதிப்புகள் வராமல் மனதை பாதுகாத்துக் கொள்வது எமக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான திறனாகும்.

இது ஒவ்வொருவரும் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறனாகும்.

இந்தத் திறன் "சலனமற்ற நிலையில் மனதை உறுதியாக வைக்க உதவும்". சிறந்த முறையிலான பயிற்சிகளின் மூலம் இந்த திறனை வளர்க்க முடியும். இந்த திறனை வைத்து எங்கள் எல்லோருடைய மனதையும் பக்குவப்படுத்தலாம். இதற்கான பயிற்சியை பிள்ளை பருவம் தொட்டு வீட்டிலிருந்தும் பாடசாலையிலுருந்தும் பெற்றுக் கொடுக்க வேண்டியிருக்கிறோம்.

வெறும் அறிவை பெறுவதன் மூலமும் அறிவை கொடுப்பதன் மூலமும் மனதை பக்குவப்படுத்தலாம் என்று கருதலாகாது. மனதை பக்குவப்படுத்தி பயனும் பெறுமதியும் நிறைந்த மனநிலையை அடைவது எப்படி என்று சிந்திக்கவும் அதை அடைவதற்கான வழிகாட்டலும் சேர்ந்த கல்வியே கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும். மனம் எவ்வளவு பக்குவம் அடையுமோ அவ்வளவு நடத்தைகள் நாணம் மிக்கதாக வெளிப்பட ஆரம்பிக்கும்.

அறிவியல் தகைமைகள் பலவற்றை பெற்ற எல்லோரிடமும் மனப்பக்குவம் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடு இன்றி எவராலும் மனதை பக்குவப்படுத்தலாம். ஆனால் அந்த இடத்தை அடைவதற்கு கல்வியை மிக முக்கிய கூராக பயன்படுத்த நாம் தவறக் கூடாது.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## கல்விச்சேவையோடு சமூக சேவையையும் ஆற்றிய பல்துறை ஆளுமை!

# ஏறாவூர் "அலிகார்" முன்னாள் அதிபர் மர்ஹூம் நூர்முஹம்மட்

விஞ்ஞான உதவி ஆசிரியராக, பயிற்சி பெற்ற பட்டதாரி போதனாசிரியராக, அதிபராக, கல்வி மற்றும் சமயம், சமூகம் சார்ந்த பல்வேறு அமைப்புகளின் பங்களிப்பாளராக, சமூக சேவையாளராக தமது கல்லூரிக்கும், ஊருக்கும் சிறப்புற சேவையாற்றி தனித்திலங்கிதொரு ஆளுமையாளர் ஏறாவூர் "அலிகார்" தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் மர்/ஹம் அல்- ஹாஜ் ஏ. நூர் முஹம்மட் ஏறாவூர் அலிகாரின் பழைய மாணவரான நூர் முஹம்மட் ஏறாவூர் மர்ஹூம்களான அசனார் - செய்லத் உம்மா தம்பதியின் புதல்வராக 1953ல் பிறந்தார். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியருமான நூர் முஹம்மட் சிஃ வெல்பொத்துவெவெ கல்லூரியில் 02-10-1972ல் தனது பத்தொன்பதாவது வயதில் விஞ்ஞான உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

பட்டதாரி, போதனாசிரியரான இவர் களுத்துறை, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை உள்ளிட்ட பிரதேச பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக அருங்கல்விப் பணியாற்றியவர்.

ஏறாவூர் "அல்-அஸஹர்" கல்லூரியில் முதல் அதிபராக பின்னர் வாழைச்சேனை "அந்-நூர்" தேசிய பாடசாலையிலும், இறுதியாக ஏறாவூர் "அலிகார்" தேசிய பாடசாலையிலும் அதிபராகக் கடமையாற்றி தனது 41 வருடகால கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஏறாவூர் "ஓய்வுநிலை அதிபர் சங்கத்தின் உப தலைவராகவும், கல்விச் சேவையோடு பல சிவில் அமைப்புகளில் அங்கம் வகித்து சிறப்புற கல்வி, சமய சமூக சேவைகளையும் புரிந்தவர். இவர்தம் கல்வி, சமூக சேவைகளுக்காக பாராட்டியும் கௌரவிக்கப்பட்டவர்.

உலமாக்கள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், சமய சமூக வர்த்தகப் பிரமுகர்கள் என பல தரப்பினரோடும் நெருக்கமான நட்புறவையும், தன்னகத்தே வளர்த்துக்கொண்டு துணிச்சலோடும், திறமையோடும், ஒழுக்கக் கட்டுப்பாட்டோடும் கல்விக்காகவும், ஊருக்காகவும் தனித்துச் சேவையாற்றியவர்.

உயர்ந்த உருவம், நிமிர்ந்த நடை, சிவ(சிரி )த்த முகம் நேர்கொண்ட பார்வையாளரான நூர்முஹம்மட் அமைதியும், அடக்கமும், பணிவும் நிறைந்த நற் பண்பாளராகத் திகழ்ந்தவர். பத்திரிகைகள் பார்ப்பதிலும்,புத்தகங்கள் வாசிப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் .

சுகயீனமுற்றிருந்த நிலையில் கடந்த ஹஜ்பெருநாள் (17) திங்கட்கிழமையன்று தனதில்லத்தில் நள்ளிரவில் இவ் உலகைவிட்டு பிரிந்தார்.

அன்னாரின் ஜனாஸா (17-06-24) அன்றைய தினம் ஏறாவூர் காட்டுப் பள்ளி வீதி, மஸ்ஜிதுந் "நூருஸ் ஸலாம்" பள்ளிவாசல் மையவாடியில் பகல்நேர லுஹர் தொழுகையின் பின்பு நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நிகழ்வில் கல்வியியலாளர்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள் சமய சமூக வர்த்தகப் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

மர்/ஹம் நூர் முஹம்மட் அதிபர் மட்ஃகோட்டை முனை ஓய்வு நிலை பிரதி முகாமையாளர் ஹாஜியானி சித்தி ரஸீனா குத்தூஸின் துணைவரும், பொறியியலாளர் நுவைர் ஹஸனின் தந்தையாரும், காத்தான்குடி சஹ்லினா சஹீட் நுவைரின் (ஆசிரியை பேருவளை) மாமனாரும், ஜலால் பீவி கச்சி முஹம்மட், பரீதா கலீல் (ஓய்வு நிலை ஆசிரியை) டாக்டர் காதர் பீவி நஸீம் ஆகியோரின் மூத்த சகோதரரும், பதுளை பிரதேச ஊடகரும், கவிஞ(கதை)ருமான மட்டு நகர் வாஹிட் குத்தூஸின் மைத்துனருமாவார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னார்தம் பிழை பாவம் மன்னித்து நல்லருள் பாலித்து மேலான சொர்க்கத்தில் சேர்ந்தருள்வானாக.

(அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ்)

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## நாலு பணத்துக்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்

இந்த வசனம் இன்றைய முஸ்லிம் சமூகத்துக்கு பொருந்தும் வசனமாகும். முஸ்லிம் சமூகம் இதை எதிர்பார்க்கிறது. முஸ்லிம் சமூகம் மட்டுமல்ல முஸ்லிம் சமூகத்தின் தேவைகளுக்கென நியமிக்கப்படுபவர்களிடமிருந்த அரசும் இதனை எதிர்பாக்கிறது.

இதற்கு சில உதாரணங்களை எடுக்கலாம். நாட்டில் பொதுச்சட்டத்தின் கீழ் வரும் விவாக விவகாரங்களை விசாரிக்க தீர்ப்பளிக்க மாவட்டம் தோரும் மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. இவை அதிகாரம் பொறுத்தியவை. இதற்கு நீதிகதிகள் அரசினால் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு கைநிறைய சம்பளம் வங்கப்படுகிறது. உத்தியோக பூர்வ பங்களாக்கள் வழங்கப்படுகின்றன. அரச செலவில் சாரதிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும் வழங்கப்படுகினறன. இது ஒரு கௌரவமான அரச நிரந்தர தொழிலாகவும் மதிக்கப்படுகின்றது. இவர்களது கொடுப்பனவுகளை கணக்கிட்டால் பல இலட்சங்களாகும்.

முஸ்லிம்களின் விவாக வழங்ககளை விசாரிகக காதி நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவஉகள் மாஉக்க சட்டப்படி பிணக்குகளை தீஉத்து வைக்கின்றனர். விவாக ரத்துக்களை கொடுக்கின்றனர். முன்னர் கூறிய மாவட்ட நீதிபதிகளை அரசாங்கத்தின் நீதி சேவை ஆணைக்குழு நியமிக்கிறது. பதவி உயஉவுகளை வழங்குகிறது. மாதாந்த சம்பளத்தை அரசாங்கம் வழங்குகிறது. இளைப்பாறிய பின் இளைப்பாற்றுச் சம்பளத்தையும் அரசாங்கம் வழங்குகிறது.

அதே நீதி சேவை ஆணைக்குழு தான் காதிமாஉகளையும் நியமிக்கிறது. பதவி நீக்கமும் செய்கிறது.

ஆனால் இந்த மாவட்ட நீதிகதிகளம் காதி நீதிபதிகளும் விவாக வியடத்தில் ஒரே செயலைத்தான் செய்கின்றனர். மாவட்ட நீதிபதி நாட்டின் பொதுச் சட்டத்தின்படி விவாக ரத்து வழங்குகிறதா? தரப்புகளுக்கு நட்டவீட்டைப் பெற்றுக் கொடுக்கிறார். பராமரிப்பு பணத்தை விதிக்கின்றனர். காதி நிதிபதிகள் இஸ்லாமிய சட்டத்தின்படி விவாகரத்தை வழங்ககின்றனர். நட்டவீட்டை பெற்றுக் கொடுக்கின்றார். பராமரிப்பு பணத்தை விதிக்கின்றார்.

எனினும் இந்த இரு பதவிகளுக்குமிடையே பெரும் பாரபட்சமும் வேறுபாடும் காணப்படுகிறது. மாவட்ட நீதிபதிக்கு பெரும் சம்பளம் இளைப்பாறிய பின் இளைப்பாற்றுச் சம்பளம் ஆனால் காதி நீதிகதிக்கு அவ்வாறு இல்லை. காதி நீதிபதிக்கான சம்பளம் மாதம் ஏழாயிரத்து ஐநூறு மட்டுமே. மாவட்ட நீதிபதி மாதம் இலட்சங்களாக பெறும் போது காதி நீதிபதிகளுக்கு மாதம் 7500 மட்டுமே தங்க இல்லங்களோ, அதற்கு வாடகையோ, பாதுகாவல் அதிகாரிகளோ இல்லை. இந்த 7500 ரூபாவுக்கு இவர் மாதந்தோரும் நீதி செலுத்த வேண்டும்.

மாவட்ட நீதிபதிகளுக்கு பங்களாக்கும், மேலதிகமாக விசாரணைக்காக நீதிமன்றக் கட்டிடங்கள் அரசினால் கட்டப்பட்டுள்ளன. அது கெரளவாக அமைக்கப்பட்டுள்ளது. அந்த நீதிமன்றங்களில் பல பதவிகளிலும் பல அதிகாரிகள் உதவியாளர்கள், ஊழியர்கள் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அரச அதிகாரிகளாவர். இவர்களுக்கு சம்பளமும், ஓய்வதியமும் உண்டு. பதிவாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், எழுது விளைஞர்கள், காரிய உதவியாளர்கள் என பலர் இந்த மாவட்ட நீதிபதிக்கு கீழ் உள்ளனர்.

காதிகளுக்கு ஒன்றுமே இல்லை. அவஉ வழக்கு விசாரிக்க ஒரு கட்டிடத்தை தேடிக் கொள்ள வேண்டும். எழுத்து வேலைகளை செய்ய ஒரு எழுது விளைஞரை தேடிக் கொள்ள வேண்டும். நீதிமன்ற கட்டிடத்தின் மாத வாடகையாகவும் அந்த எழுது விளைஞரின் மாத சம்பளமாகவும் மொத்தம் மாதம் 5250 ரூபாய் அரசினால் வழங்கப்படுகிறது. இன்றைய காலப்பகுதியில் ஒரு மாத சம்பளத்துக்கு 5250 ரூபா போதுமா எனவே காதிமாஉ தமக்குக் கிடைக்கும் 7500 ரூபாவையும் கொடுத்து மேலதிகமாகவும் கையால் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காதி நீதிமன்றத்தில் விசாரணைகள் நடக்கும்போது மூன்று ஜூரிகள் இருக்க வேண்டும். இவஉகளை காதி நீதிபதிகள் நியமித்துக்கொள்ள வேண்டும். இவஉகளுக்கு இதற்கு கொடுக்கும் பணம் வெறும் எழுபத்தைந்த ரூபா மட்டுமே. இன்று இந்த 75 ரூபாவில் ஒரு தேனீர் கூட அருந்த முடியாது.

இந்த சிறிய தொகையை கொடுத்து விட்டு கதி நீதிமபதிகளிடம் ஒரு மாவட்ட நீதிபதி செய்யும் வேலையை எதிஉப்பாஉப்பது நியாயமா?

எனவே, முஸ்லிம் மாவட்ட நீதிபதிகளை நியமித்து நீதிமன்றங்களில் தனி நீதிமன்றத்தை திறந்து தினந்தோறும் வழக்கை நடத்த வேண்டும். மாவட்டத்தில் ஒரு நீதிபதியை நியமிக்கலாம். இவ்வாறு இருந்தால் ஊழல்கலும் குறையும். கௌரவமும் பாதுகாப்படும். இன்று மாஉக்கக் கல்வி பெற்ற சட்டத்தரணிகள் நிறைய இருக்கின்றனஉ. எனவே நியமிக்க ஆள் இருக்கின்றாஉகள். ஒரு மாவட்டத்திற்கு ஒரு நீதிபதியே போதுமானது. மாவட்ட நீதிமன்றம் இயங்கும் தினங்களில் நடத்தலாம்.

இது அரசாங்கம் செய்யும் வேலை. நம்மவஉ செய்யும் வேலைகளையும் பாஉப்போம்.

அனைத்து முஸ்லிம் கிராமங்களிலும் பள்ளிவாசல்கள் உள்ளன. அநேகமானவற்றில் மத்ரஸாக்களும் உள்ளன. இவற்றிற்கு உலமாக்களும் உஸ்தாதிகளும் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு வழங்கும் சம்பளத்தில் சமத்தன்மை உள்ளதா? ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சம்பளம். இந்த சம்பளம் இவர்கள் வாழ்வதற்கு போதுமானதா இவர்கள் படும் பொருளாதார கஷ்டங்கள் சிந்திக்கப்படுகின்றனவா? இவர்களும் திருமணம் செய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க வேண்டும். கல்வியை வழங்க வேண்டும். உடை வழங்க வேண்டும். இவை எல்லாவற்றிக்கும் இவர்களுக்கு கொடுக்கும் சம்பளம் போதுமா? இதனை நாம் சிந்திக்க வேண்டும்.

ஆனால் இவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் சேவை இந்தத் தலைப்பை போன்றது.

அது மட்டுமல்ல. உழைத்து உழைத்து ஓய்வு பெற்றபோது இவர்களுக்கு ஏதாவது கொடுக்கப்படுகிறதா அதுவும் இல்லை. உழைப்பவஉகளுக்கு இளைப்பாற்றுச் சம்பளம், ஊழிய சேமலாப நிதி என்று சட்டம் கட்டாயப்படுத்திய பல முறைகள் நாட்டில் உள்ளன. இவற்றைப் பெற சட்டமும் உதவுகிறது. ஆனால் இந்த உலமாக்களுக்கும் உஸ்தாக்களுக்கும் இளைபாறிய பின் ஒன்றுமே இல்லை. இதுபற்றி சிந்தித்து இவர்களுக்கு இளைபாற்று நிதி முறை ஒன்றையாவது கொண்டு வர எமது சமூகத்தின் தலைவஉகள் பள்ளி நிர்வாகிகள் சிந்திக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல நிர்வாகிகள் நினைத்தவுடன் பதவி நீக்கமும் செய்யப்படுகின்றனர். இவர்கள் குடும்பங்களில் பிறப்பு முதல் மரணம் வரை அதுமட்டுமல்ல மரணத்தின் பின்னும் கடமை செய்ய வேண்டும் என்ற நிலை உள்ளது. இவர்கள் செய்யும் வேலையில் குறை தேடும் நிர்வாகிகளும், மக்களும் இவர்களது சம்பளம் பற்றி சிந்திப்பதில்லை.

போட்டி போட்டிக் கொண்டு போட்டியிட்டு தலைமை பதவியை பெறும் நிர்வாகி தமக்கும தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் சேமித்து வைக்க எடுக்கும் முயற்சி போன்று இந்த உலமாக்களின் உஸ்தாக்களின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

இதை விட்டு நாலு பணத்துக்கு குதிரையும் வேண்டும அது ஆறு கடக்கப் பாயலும் வேண்டும் என்று எதிஉபாப்பது பிழையாகும்.

# விளையாட்டு கழகங்களுக்கு ஆற்றிவரும் சேவையினை பாராட்டி கௌரவம்






(எம்.எப்.றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு ஆற்றிவரும் சேவையினை பாராட்டி கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப் கௌரவிக்கப்பட்டார்.

பாலமுனை சுப்பர் ஒர்கிட் விளையாட்டுக்கழகத்தின் 37வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மற்றும் ஒலுவில் இலவன் ஸ்டார் கழகம் ஏற்பாடு செய்திருந்த பிரிமியல் லீக் கிரிகெட் சுற்றுத் தொடரிலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானம், ஒலுவில் அல் ஜாயிஸா மகளீர் கல்லூரி மைதானத்திலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள முன்னணி கழகங்கள் பங்குபற்றிய இவ் போட்டி நிகழ்வுகளில் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் கழகங்களினால் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூக ஒற்றுமைக்காக கலாச்சார நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூகங்களுக்கிடையில் கலாசார விழுமியங்களை மதித்து புரிந்துணர்வுடன் ஒருவருக்கொருவர் பரஸ்பர உறவுகளை மேற்கொள்ளவேண்டும் எனும் தொனிப்பொருளில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் கலாசார நிகழ்வுகள் அதிபர் ஏ.ஜீ.எம். நிசாத் தலைமையில், பாடசாலை ஆசிரியர்களினால் அண்மையில் (25) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அதிபரினால் ஹஜ் கடமை பற்றிய வரலாறு சுருக்கமாக ஆசிரியர்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டதோடு பெருநாள் கலாசார உணவுகளும் பரிமாறப்பட்டன.

# குளோபல் ஃபினான்ஸ் உலகின் சிறந்த வங்கி விருதுகள் வழங்கும் நிகழ்வில் அமானா வங்கிக்கு மீண்டும் கௌரவிப்பு

இலங்கையின் சிறந்த இஸ்லாமிய நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் எனும் உயர் கௌரவிப்பை அமானா வங்கி மீண்டும் தனதாக்கியுள்ளது. இந்த வருடத்தின் பிற்பகுதியில் சர்வதேச நாணய நிதியம்ஃஉலக வங்கியின் வருடாந்த சந்திப்புகள் நடைபெறும் காலப்பகுதியில், அமெரிக்காவின் குளோபல் ஃபினான்ஸினால் ஏற்பாடு செய்யப்படும் 17 ஆவது உலகின் சிறந்த வங்கி விருதுகள் 2024 நிகழ்வில் இந்த கௌரவிப்பு வழங்கப்படும்.

அமெரிக்காவின் குளோபல் ஃபினான்ஸ் என்பது நிதிசார் ஊடகவியலில் கொண்டுள்ள நிபுணத்துவத்துக்காக புகழ்பெற்றுள்ளது. நாடு, பிராந்தியம் மற்றும் சர்வதேச மட்டத்தில் நிதித் துறையில் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சிறந்த பங்களிப்புகளை வருடாந்தம் கௌரவிக்கின்றது. இதில், சர்வதேச மட்டத்தில் வளர்ச்சியடைந்து வரும் வட்டி சாராத இஸ்லாமிய வங்கிச் சேவை மற்றும் நிதிச் சேவைகள் துறையில் ஈடுபாட்டைக் கொண்டுள்ள நிறுவனங்களின் சிறந்த செயற்பாடுகளை கௌரவித்து விருதுகளை வழங்கும் நிகழ்வையும் முன்னெடுக்கின்றது.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "வங்கியியலில் சிறப்பைக் கொண்டுள்ளமைக்காக சர்வதேச மட்டத்தில் கௌரவிப்பைப் பெறுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். முன்னர் உலகின் சிறந்த வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கி என குளோபல் ஃபினான்ஸினால் கௌரவிக்கப்பட்டிருந்த நிலையில்,




அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட மற்றும் மக்களுக்கு நட்பான வங்கியியல் மாதிரியை கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது. எமது தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபையைச் சேர்ந்தவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் சகல ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்களின் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐஎனுடீ குரூப் 'டீயுயு' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது.

வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ஒரிஜின் முசாயெனசநிசேயர்? நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.




பயாஸா பாஸில்



# இறைவனுக்கு நன்றுள்ளவர்களாவோம்

– ஷாறா –

அவனுக்கு ஆபத்தில் உதவியிருக்கிறீர்கள். ஆனாலும் பாருங்கள் எப்படி நடந்துகொண்டான் என்று! நன்றி கெட்ட ஜென்மம்.

அவள் படித்ததே உங்களது நிதி உதவியால் தான். அப்படியெதுவும் நடக்காதது போல அல்லவா நடந்து கொள்கிறாள்!

அவனது மகனுக்கு எப்படியெல்லாம் வழிகாட்டினேன்.! கண்டும் காணாதது போலப் போகிறானே!

இப்படி நன்றி கெட்ட ஜென்மங்களை அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா!

இப்படிப்பட்ட ஜென்மங்களைப் பார்க்கும் போது தான் மனிதர்களுக்கு உதவி செய்வதே வெறுத்துப் போகிறது. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு என வள்ளுவரும் சொல்லியிருக்கிறாரே!

சரிதான்! அதைப் பற்றிப் பேசி வேலையில்லை.

இப்போது வேறு ஒன்றைப் பற்றிப் பார்ப்போமே!

உங்கள் உடலை நன்றாகப் பாருங்கள்!

இரு கண்கள் முகத்தை அலங்கரிக்கின்றன. அந்த அழகிய கண்களுக்கு ஏதும் நடந்து விடக் கூடாதே என இமைகள் படபடத்துக் கொண்டிருக்கின்றன. கூரான மூக்கு ஓயாமல் சுவாசித்துக் கொண்டிருக்கிறது. அந்த மூக்குத் துவாரங்கள் உள்நுழையும் வளியை வடித்தெடுக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

அழகான உதடுகள், பற்கள், நாக்கு என எல்லாமே அதிசயங்கள்.

எல்லாம் அவன் தந்தவையல்லவா!

நீங்கள் அவளுக்கு உதவியாகக் கொடுத்த சில பச்சைத் தாள்களோடு இந்தக் கண்களையும் மூக்கையும் வாயையும் காதுகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

உங்களது அற்ப உதவியை வானளாவ நினைத்து, அதற்கு நன்றி செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கும் நீங்கள் இறைவன் தந்துள்ளவற்றுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

வாழ்வில் முன்னேற அவனுக்கு வழிகாட்டியதற்குப் பதிலாய் அவன் உங்கள் பின்னால் நாய்க்குட்டியாய் வாலை ஆட்டிக் கொண்ட வர வேண்டுமென ஆசைப்படும் நீங்கள், இத்தனையும் ஈந்த இறைவனுக்குப் பின்னால் அவன் வழியிலா போய்க் கொண்டிருக்கிறீர்கள்?

மனிதர்கள் எமக்கு நன்றி பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் ஏக்கத்தையும் தூர எறிவோம். இறைவன் கருணையோடு எமக்கு அருளியுள்ள எல்லையில்லா அருள்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்.





அரபாத் பஹர்தீன்

# இங்கிலாந்து இளையோர் அணியை வீழ்த்திய இலங்கை இளையோர் அணி

இங்கிலாந்து 19 வயதிற்குற்பட்ட அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் ஷாருஜன், மஹித் மற்றும் டினிரு ஆகியோரின் அசத்தல் அரைச்சதங்களின் உதவியுடனும் விஹாஸ் தெவ்மிகவின் மிரட்டல் பந்துவீச்சின் உதவியுடனும் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை 19 வயதிற்குற்பட்ட அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள் கொண்ட ரி20 தொடர்களில் முதலில் இடம்பெற்றுவரும் ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் இங்கிலாந்தின் வெல்மிஸ்பேர்ம் மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து 19 வயதிற்குற்பட்ட அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 19 வயதிற்குற்பட்ட அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மத்திய வரிசை துடுப்பபாட்ட வீரரான ஷாருஜன் சன்முகநாதன் 57 ஓட்டங்களையும் , அதிரடியாகத் துடுப்பாடிய மஹித் மற்றும் டினிரு ஆகியோர் தலா 58 மற்றும் 52 ஓட்டங்களையும்ிளாசிக் கொடுத்தனர். அணித்தலைவரான டினுர கல்பஹான 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கார்ன்வெல் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பின்னர் பதிலுக்கு 295 என்ற எட்டக் கடினமான வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த இங்கிலாந்து 19 வயதிற்குற்பட்ட அணியால் 43.3 ஓவர்களுக்கு முகம் கொடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களையே பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் நோஹ் த்தைன் 58 ஓட்டங்களையும், அணித்தலைவரான பென்கன்ஸ்டைன் 51 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் விஹாஸ் தெவ்மிக 3 விக்கெட்டுக்களையும், ஹிவின் கெனுல, திஷார மற்றும் ப்ரவீன் மனீஷ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனால் இலங்கை 19 வயதிற்குற்பட்ட அணி 65 ஓட்டங்களால் இலகு வெற்றியைப் பதிவு செயத்ததுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நாளை (1) இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டியில் வரலாறு படைத்த கல்பிட்டி அல்-அக்ஸாவின் மாணவர்கள் 8 பேர் மாகாண மட்டத்திற்குத் தகுதி




இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இடையிலான புத்தளம் வலய சதுரங்கப் போட்டியில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 8 மாணவ மாணவியர் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிகியுள்ளனர்.

கல்வி அமைச்சின் வழிகாட்டலில் இலங்கை பாடசாலை விளையாட்டு சபையுடன் இணைந்து இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் நடாத்தியிருந்த புத்தள வலய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 22 மற்றும் 23ஆம் திகதிகளில் புத்தளம் ஆனந்தா தேசிய பாடசாலையில் இடம்பெற்றிருந்தது. இதில் 7 வயதுப் பிரிவு, 9,11,13,15,17 ஆகிய வயதுப் பிரிவுகளில் ஆண் மற்றும் பெண் பிரிவுகளாக இப் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்து 7 வயதுப் பிரிவில் ஒருவரும், 9 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிக்கு 4 மாணவர்களும், பெண்கள் பிரிவில் ஒருவரும் பங்கேற்றனர். மேலும் 11 வயது ஆண்கள் பிரிவில் 10 மாணவர்களும், பெண்கள் பிரிவில் ஒருவரும், 13 வயதுப் ஆண்கள் பிரிவில் மூவரும், 15 வயது ஆண்கள் பிரிவில் 7 பேரும், பெண்கள் பிரிவில் ஒருவரும் பங்கேற்றனர். அத்துடன் 17 வயது ஆண்கள் பிரிவில் நால்வரும், பெண்கள் பிரிவில் இருவருமாக மொத்தம் 35 மாணவ மாணவியர் இப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

இதில் 13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆத்திப் தகுதி பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவானார். பின்னர் இடம்பெற்ற 15 வயதுக்குற்பட்ட பெண்கள் பிரிவில் எம்.எஸ்.எப். சபீஹா 2ஆம் இடம்பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவானார். அடுத்து 15 வயதுக்குற்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆதில் ஹசன் மற்றும் எம். எம். மயிஸ் அஹமட் ஆகியோர் அடுத்த மட்டப் போட்டியின் கால்பதிக்கள்ளனர்.

மேலும் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் 3ஆம் இடம்பெற்ற எம்.ஆர். ஆயிஷா மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், அதே வயதெல்லையின் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆஷிப் 2ஆம் இடத்தையும், எஸ்.டி. இத்தர்ஷனன் 3ஆம் இடத்தையும், எம்.எஸ்.எம். சியாப் தகுதியைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகி அசத்தினர்.

அதற்கமைய கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்து பங்கேற்ற 35 மாணவ மாணவிகளில் 8 பேர் மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவானமை மகிழ்ச்சி அளிப்பதாகவும், இம் மாணவர்கள் தேசியம் வரை பாடசாலையின் பெயரை கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எஸ். எப். சாஜினாஸ் தெரிவித்திருந்தார். இப் போட்டியில் பங்கேற்ற மற்றும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் 25 ஆம் திகதி பாடசாலையில் காலைக் கூட்ட நிகழ்வில் வைத்து கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூர் அலிகார் 2024 ழுஉயு வெற்றிக்கிண்ணம் 2015 ம் ஆண்டு வசமானது



(உமர் அறபாத் -ஏறாவூர்)

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பநாள் நிகழ்வு கடந்த 20ஃ06ஃ2024 அன்று பாடசாலையின் முதல்வர் எம்.எம்.மௌஜூத் தலைமையில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மூன்று கட்டங்களாக இடம்பெற்றன.

அந்த வகையில் கனீஷ்ட பிரிவில் 2015 ம் ஆண்டினர் சம்பியனாகவும் சிரேஷ்ட பிரிவில் 2002 ம் ஆண்டு அணியினர் சம்பியனாக தெரிவாகினர்.

அதனைத் தொடர்ந்து 2024ம் ஆண்டினுடைய சம்பியனுக்கான இறுதிச்சமர் இடம்பெற்றது.

இப்போட்டியில் அலிகாரியன்களான 2002 ஆண்டு மற்றும் 2015 ஆண்டு அணியினர் பலப்பரீட்சையின் போது இவ் ஆண்டுக்கான ஓவர்ரோல் சம்பியனாக 2015 ம் ஆண்டு அணியினர் மகுடம் சூடினர்.

வெற்றிபெற்ற அணியினருக்கான வெற்றிக்கிண்ணத்தினை மட்டு.நாடாளுமன்ற உறுப்பினர் செய்யித் அலிஷ ாஹிர் மௌலானா நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.